# முத்துமாலை



ஔவை குழந்தை மேம்பாட்டு திட்டம் - 4126
ChildFund India
260, பொது அலுவலக சாலை,
வெளிப்பாளையம்,நாகப்பட்டினம் – 611 001
Phone : 04365 248998, Fax : 04365 247513,
Email : avvaikk@sify.com, Web : www.avvai.org

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | துணுக்குகள் | 3 |
| 2. | பழமொழிகள் | 4 |
| 3. | கதை கேளுங்க | 5 |
| 4. | கண்டுபிடி | 27 |
| 5. | ஸ்பான்சருக்கு நன்றி | 31 |
| 6. | திட்ட செயல்பாடுகள் | 34 |
| 7. | வண்ணங்கள் | 41 |
| 8. | செய்தி துணுக்குகள் | 47 |
| 9. | சைல்டு லைன் – 1098 | 50 |

## கதை கேளுங்கள்

# 1. கல்விச் செல்வம்



ஒரு பசுமாடு இருக்கு... ஒரு பொருளை உருட்டணும்ன்னா அது தானாவே போய் உருட்டி உடைக்கும்.

ஒரு ஆளை முட்டணும்ன்னு வச்சிக்குங்க... அது தானாவே போய் முட்டும்.

இதெல்லாம் கெட்ட காரியங்கள்.

இதையெல்லாம் செய்யிற அந்தப் பசுமாடு... பால் கொடுக்கறது நல்ல காரியம்... அதைத் தானாவே கொடுக்காது... தானாவே நம்ம வீட்டுக்கு வந்து எங்கே செம்பைக் காணாமோ–ன்னு தேடி எடுத்து... கொல்லைப் பக்கம் கொண்டுகிட்டுப் போய் தானாவே கறந்து கொண்டாந்து நம்ம கையிலே கொடுத்து... பத்திரமா வைங்க... பூனை கீனை வந்து குடிச்சுடப் போவுது – அப்படின்னு சொல்லிப்புட்டுப் போவாது! அதனாலே நல்ல காரியத்தை மனிதன் தானாகவே செய்யணும் – பார் திருக்குறளார் வீ.முனுசாமி.

இந்த உலகத்துலே எல்லாச் செல்வமும் அழிஞ்சுடும்... ஆனால் கல்விச் செல்வம் அழியாது – அப்படிங்கறதை விளக்கமாகவும் வேடிக்கையாகவும் அவர் சொல்லுவார்.

அவர் ஒரு நாள் வெளியூர் போயிருந்தாராம். அப்போ அவருடைய நண்பர் ஒருத்தரைப் பார்த்துக் கேட்டாராம்...

“இருபது இருப்பதஞ்சு வருசத்துக்கு முன்னாடி இங்கே ஒரு பெரிய ஆலமரம் இருந்துதே... அது எங்கே?” – ன்னு கேட்டாராம்.

“அது புயல் காற்றுலே விழுந்துட்டுது!”–ன்னாராம் அவர். இது அழிகின்ற செல்வம்.

“அங்கே ஒரு பெரிய கட்டிடம் இருந்துதே அது எங்கே சார்?” –ன்னு கேட்டிருக்கார்.



“அது மழை பெய்தப்போ இடிஞ்சி விழுந்துட்டுது!”–ன்னு சொன்னாங்களாம்.

இதுவும் அழகின்ற செல்வம்.

சிலபேர் பார்க்கறதுக்கு அழகாய் இருப்பாங்க! அழகும் அழிகின்ற செல்வம்தான்.

அழகு கொஞ்ச நாளைக்கு இருக்கும், அப்புறம் போயிடும்!

அதனாலேதான் சிலபேர் அவசர அவசரமா ஃபோட்டோ எடுத்து வச்சிக்குவாங்க.

இருக்கறதும் போயிடப் போவுதுங்கற பயம்!

நாம சாதாரணமா பேசும்போது சொல்வோம்:

“அதோ போறாரே... அவரு பத்து வருசத்துக்கு முன்னாடி இரண்டு லட்ச ரூபாய் வச்சிருந்தார்... எல்லாம் செலவாயிட்டுது... இப்போ நம்ம கிட்டே வந்து இரண்டு ரூபா இருக்குமா...”–ன்னு கேட்கிறார்.

இது அழிகின்ற செல்வம். ஆனால் கல்வி அப்படிப் பட்டது அல்ல.

“அதோ... போறாரே... அவரு பத்து ஆண்டுகளுக்கு முன்னாடி எம்.ஏ. பாஸ் பண்ணியிருந்தார்.

இப்போ எல்லாம் செலவாப் போயி... எட்டாவது வகுப்புக்கு வந்துட்டார்”–ன்னு சொல்ல மாட்டோம்.

“கோடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு

மாடல்ல மற்ற யவை.”

–அப்படிங்கறார் திருவள்ளுவர்.

கல்வி – பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளரும்.

பணம் – கொடுக்க கொடுக்கக் குறையும்.

அதனாலேதான் பணத்தை இன்னொருத்தருக்குக் கொடுத்தா திருப்பிக் கொடு–ன்னு கேட்கிறோம்.

ஏன்–னா அது குறைந்திருக்கு!

கவிதை-ங்கற பேர்லே ஒரு கட்டுரையை எழுதி வச்சிக்கிட்டு... நம்மளை எல்லாரும் கம்பர்ன்னு சொல்லணும்ன்னு எதிர்பார்த்துக்கிட்டிருந்தா... அது நடக்கற காரியமா? நாமளே சொல்லிக்கிட்டாத்தான் உண்டு!

அதே மாதிரி...

நம்முடைய திறமை எவ்வளவுங்கறது நமக்கு நல்லாத் தெரியணும். அதை அளவுக்கு மீறி நாமளே எடை போடக் கூடாது. அது தோல்வியைத்தான் உண்டுபண்ணும்.

நம்மாலே 30 கிலோ எடையைத்தான் தூக்க முடியும்.. அப்படி இருக்கறப்போ 60 கிலோவை அனாவசியமா தூக்கிப்புடுவேன்னு சவால்விட்டா அது சரியா வருமா? அசைச்சிப் பார்த்துட்டு... அது முடியாமே தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டுத் திரும்பிவர வேண்டியிருக்கும்.

அப்புறம் இன்னொரு கருத்து.

தோல்வி -ங்கறது இயல்பான ஒண்ணு.

தோல்வியே சந்திக்காத மனிதன்னு யாரும் இருக்க முடியாது.

எந்தக் காரியத்துலே இறங்கினாலும் அதுலே வெற்றியும் கிடைக்கலாம், தோல்வியும் கிடைக்கலாம்.

எந்தச் செயல்பாடாக இருந்தாலும் தோல்வியும் அதுலே ஓர் அம்சம்ங்கறதை நல்லா உணரணும்.

அப்படி உணரலேன்னா தாழ்வு மனப்பான்மை ஏற்படும்.

இன்னொரு முக்கியமான கருத்து.

ஒருத்தர் வெற்றியடைஞ்சுட்டா அதைப் பார்த்து பொறாமைப்படக் கூடாது... அப்படி பொறாமைப்பட ஆரம்பிச்சுட்டோம்-ன்னு வச்சிக்குங்க... நமக்கு உள்ளத்துலே ஒரு தளர்ச்சி ஏற்படும்... அது தாழ்வு மனப்பான்மையிலே கொண்டு போய் விட்டுடும்.

வெற்றி பெற்றவங்களை மனப்பூர்வமா பாராட்டணும். அந்தப் பண்பை வளர்த்துக்கணும்.



அப்புறம்...

பிறருடைய பேச்சை ஜீரணிக்கும் திறனை வளர்த்துக்கணும். இல்லேன்னா நகைச்சுவையான பேச்சு கூட நம்மை நிலைகுலையச் செய்துடும்.

நம்மள்லே சிலபேர் இருப்பான். அடுத்தவங்க ஏதாவது நல்ல கருத்தைச் சொன்னா உடனே இவன் ஜீரணக் கோளாறு வந்தவன் மாதிரி சிரமப்படுவான். தாழ்வு மனப்பான்மைதான் காரணம்.

அப்புறம் இன்னொரு முக்கியமான கருத்து... நிபுணர்கள் சொல்றது என்னன்னா...

ஆண்கள்-பெண்களிடமோ... அல்லது பெண்கள்-ஆண்களிடமோ...

அளவுக்கு மீறிய... கற்பனை கலந்த... பயங்களையும் மரியாதைகளையும் வைப்பது... தாழ்வு மனப்பான்மையிலே கொண்டு போய் விட்டுடும்.

எதையும் பார்த்து ரசிக்கலாம்... பிரமிக்கக் கூடாது.

இதெல்லாம்... தாழ்வு மனப்பான்மையைத் தவிர்க்கறத்துக்கு வல்லுநர்கள் சொல்லிக் குடுக்கற ஆலோசனைகள்.

ஒருத்தன் இருந்தான். அவன் தன்னை ஒரு புழுவா நினைச்சிக்கிட்டான். தான் ஒரு புழு-ங்கற ஞாபகம் அவனுக்கு.

அதனாலே எதிர்லே கோழியைக் கண்டா பயந்துடுவான்... கோழின்னா... புழுவை கொத்தும் இல்லையா... அதனாலே!

ஒருநாள் ஒரு தெரு வழியா வந்துகிட்டிருந்தான்.

எதிர்லே ஒரு கோழி வந்தது...

இவன் உடம்பு பூரா நடுங்க ஆரம்பிச்சுட்டான்.

அப்போ எதிர்லே வந்த ஒரு பெரியவர் சொன்னார்:

“தம்பி... நீ ஒரு புழு இல்லே... மனிதன்...!” அப்படின்னார்.

“சார்! நான் ‘புழு’ இல்லேங்கறது எனக்குத் தெரியும். இது அந்தக் கோழிக்குத் தெரியுமா-ன்னு தெரியலையே!” அப்படின்னான்.

கொஞ்சம் இருங்கன்னு போனான். கொஞ்சநேரம் கழித்து திரும்பி வந்தான். அவன் கையிலே சங்கு... அதுலே ஒரு பக்கம் நூல் போய் இன்னொரு பக்கம் வெளியே வந்திருக்கு!

அந்நிய தேசத்துலேயிருந்து வந்தவன் தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டு... தோல்வியை ஒத்துக்கிட்டுத் திரும்பிப் போயிட்டான்!

இளவரசன் இந்த இளைஞனைப் பாராட்டினான். பரிசு கொடுத்தான். "நம்ம தேசத்து மானத்தைக் காப்பாற்றினதுக்கு ரொம்ப நன்றி!"ன்னான்.

அப்புறமா மெதுவா கேட்டான், "அது சரி... அது எப்படி சாம்பல் கயிறு–ன்னான்.

"இளரவசே... அது ஒண்ணுமில்லே... ஒரு கயிறு துண்டை வெட்டி எடுத்துத் தாம்பாளத்துலே வச்சிக் கொளுத்தினேன். அது சாம்பலானதும் அசையாமே மெதுவா எடுத்துக்கிட்டு வந்துட்டேன்!"–னான்.

சங்குலே நூலை நுழைச்சது எப்படி?–ன்னான்.

ஒரு எறும்பைப் பிடிச்சி அது உடம்புலே ஒரு மெல்லிய நூலைக் கட்டினேன். சங்குலே ஒரு பக்கமா அதை விட்டேன். அடுத்த பக்கம் ஒரு சர்க்கரைத் துண்டை வச்சேன். எறும்பு நூலை இழுத்துக்கிட்டு இந்தப் பக்கம் வந்துட்டுது!" –ன்னான்.

இந்தத் தந்திரம் உனக்கு எப்படித் தெரியும்?–ன்னான் அவன்.

"இளவரசே! என்னை மன்னிக்கணும்... உங்களுக்குத் தெரியாமே எங்க அப்பா அம்மாவையும் தாத்தாவையும் எங்க வீட்டுலேயே மறைச்சு வச்சிருந்தேன். எங்க தாத்தா தான் இந்த யோசனையைச் சொன்னார்!"–ன்னான்.

இளவரசன் யோசனை பண்ணினான். தன்னுடைய தவறு புரிஞ்சது. நாடு கடத்தின பெரியவங்களை எல்லாம் மறுபடியும் மரியாதையா திருப்பி அழைச்சிக்கிட்டு வந்தான். அவங்க அனுபவ அறிவுக்கு மதிப்பு கொடுக்க ஆரம்பிச்சான். பெரியவங்களை அலட்சியப்படுத்தக் கூடாதுங்கறதைப் புரிஞ்சிக்கறதுக்காக இந்தக் கதை.



ஒரு தாத்தாவுக்கும் பேரனுக்கும் ஒரு போட்டி.

பேரன் சவால் விட்டான். "தாத்தா! என்னைவிட உனக்கு வயது அதிகம். ஆனாலும் நீ எதைச் செய்தாலும் அதை என்னாலேயும் செய்ய முடியும்!"

"நான் என்ன செய்தாலும் அதை நீ செய்வியா?"–ன்னார். "செய்வேன்!" னான்.

தாத்தா எழுந்திரிச்சு நின்னார். இவனும் எழுந்திரிச்சி நின்னான்.

அவரு கீழே உக்கார்ந்தார். இவனும் உக்கார்ந்தான்.

அவனு படிச்சார்... இவனும் படிச்சான்.

கடைசியா அவரு கரு காரியம் பண்ணினார்.

அதாவது அவர் தன்னுடைய பல் செட்டைக் கழட்டி கீழே வச்சார்!

## 4. முடிவெடுக்கும் திறன்!

ஒரு பெரிய கிராமம்.



அந்தக் கிராமத்துலே ஒரு பண்ணையார் வீடு.

அதுதான் அந்தக் கிராமத்துலே பெரிய வீடு.

ஒரு நாள் ஒரு திருடன் அந்தக் கிராமத்துக்கு வந்தான். சுற்றிப் பார்த்தான்.

இன்னைக்கு ராத்திரி இந்த வீட்டுலேதான் நம்ம தொழிலை ஆரம்பிக்கணும்ன்னு முடிவு பண்ணிக்கிட்டான்.

நடு ராத்திரி.

அவன் மெதுவா சுவர் ஏறிக் குதிச்சி அந்தப் பெரிய வீட்டுக்குள்ளே புகுந்தான். அங்கே போய் பார்த்தா முக்கியமான இடங்கள்லேயெல்லாம் காவலுக்கு ஆள் நின்னுக்கிட்டிருக்காங்க. சரி...

"முடிவெடுக்கும் திறன்" அப்படிங்கறதை விளக்கறத்துக்காக! முடிவெடுக்கிற திறன் நம்ம ஒவ்வொருத்தருக்கும் ரொம்ப அவசியம்.

எவ்வளவுதான் பணம் இருந்தாலும் சரி...

எவ்வளவுதான் படிச்சிருந்தாலும் சரி...

இந்த 'முடிவெடுக்கும் திறன்' சரியா இல்லேன்னா வாழ்க்கையிலே பல சறுக்கல்களைச் சந்திக்க வேண்டி யிருக்கும்–அப்படிங்கறார்அவர்.

நாம முடிவுகள் எடுத்தா அந்த முடிவுகளாலே ஏற்படக் கூடிய விளைவுகளுக்கு நாம பொறுப்பு ஏற்க வேண்டியிருக்குமே – ங்கற பயத்துனாலே, முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பல சமயங்கள்லே நாம மத்தவங்களுக்குத் தாரை வார்த்துக் குடுத்துடறோம்.

நாமே முடிவு எடுக்கக் கூடிய திறமையை வளர்த்துக் கறதுதான் முக்கியம்.

ஒருத்தர் சொன்னார்:

"சார்... சின்னச் சின்னப் பிரச்சனைகள்லேயெல்லாம் எங்க வீட்டுலே என் மனைவி முடிவு எடுக்க விட்டுடுவேன்... பெரிய பிரச்சனைகள்லேயெல்லாம் நான்தான் முடிவு எடுப்பேன்!"–ன்னார்.

"சின்னச் சின்னப் பிரச்சனைகள்–ன்னா எது எது?" –ன்னு கேட்டேன்.

"வீட்டு வருமானத்தைப் பெருக்கறது எப்படி...? வீட்டுச் செலவை சரிக்கட்டறது எப்படி...? வீட்டுச் செலவுக்கு வாங்கியிருக்கிற கடனை அடைக்கறது எப்படி...?

–இதுலாம் சின்னச் சின்னப் பிரச்சனைகள்!"–னார்.

"சரி... அப்படின்னா பெரிய பிரச்சனை–ன்னா எது?"–ன்னு கேட்டேன்.

"உலகப் பொருளாதாரத்தை மேம்படுத்தறது எப்படி...? 21 ஆம் நூற்றாண்டுலே என்னென்ன சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்...?

–இதுலாம்தான்!"

அப்படின்னார்!



# 5. வெற்றிக்குக் காரணம்!

ஒரு ஊர்லே ஒருத்தன் இருந்தான்.

ஏதோ ஒரு சிறு அலுவலகத்துலே வேலை பார்த்துக்கிட்டிருந்தான். ரொம்ப ஏழை.

வருகிற கொஞ்ச வருமானத்தை வச்சி வாழ்க்கையை ஓட்டிக்கிட்டிருந்தான்.

ஒரு நாள் தெருவழியா நடந்து வந்துகிட்டிருந்தான்.

தெருவுலே ஒரு காசு கிடக்கறது தெரிஞ்சிது.


எடுத்துப் பார்த்தான்.

அது பழங்கால காசு... அந்தக் காசு நடுவுலே ஒரு துளை இருந்தது. துளையிட்ட நாணயம். பழங்காலத்துலே புழக்கத்துலே இருந்த ஒரு நாணயம்.

துளையிட்ட நாணயம் கிடைச்சா ரொம்ப நல்லது... அது அதிர்ஷ்டம்–ன்னு ஒரு நம்பிக்கை உண்டு.

இவன் கையிலே அது கிடைச்சதும் ரொம்ப சந்தோஷப்பட்டான்.

"இனிமே என்னுடைய கஷ்டமெல்லாம் தீரப்போவுது... அதிர்ஷ்டம் என்னைத் தேடிவரும்... நான் பணக்காரன் ஆகிவிடுவேன்...!"ன்னு சொல்லிக்கிட்டு... அந்தக் காசை தன்னுடைய கேட்டுப் பையிலே பத்திரமா போட்டு வச்சிக்கிட்டான். அடிக்கடி அதைத் தொட்டுப் பார்த்துக்குவான்... வெளியிலே எடுக்கமாட்டான்.



இப்படியே கொஞ்சகாலம் ஆச்சு. அதுக்கப்புறம் என்ன ஆச்சு தெரியுமா?


# ௬. சினத்தின் குணம்!

ஒரு மனிதன் கோபப்படும்போது அவனை நல்லா கவனிச்சிப்பாருங்க... ஏதாவது ஒரு மிருகத்தின் சாயல் அவன் முகத்துலே தெரியும்!

முகம் அழகா இருக்கிறது எப்போ? அவன் புன்னகையோட இருக்கிறப்பதான்! கோபமா இருக்கிறப்போ முகம் அழகா இருக்காது!

"சார்... கோபத்துலே இருக்கார்... இந்த கோபம் குறையறத்துக்குள்ளே ஒரு ஃபோட்டோ எடுத்துக்கோ... அழகா இருக்கும்!"–ன்னு யாரும் சொல்றதில்லை.

ஃபோட்டோ எடுக்கறவர் கூட... எடுக்கறதுக்கு முன்னாடி "முகத்தைக் கொஞ்சம் சிரிச்ச ம
சார்!"–ன்னு தான் சொல்லுவார்.



"முகத்தைக் கொஞ்ச கடுகடுப்பா வச்சிக்குங்க சார்... அப்பதான் நல்லா அமையும்!" –ன்னு சொல்லமாட்டார்.

ஓர் உண்மை என்ன தெரியுமா?

கோபம் மனசையும் கெடுக்கும்... உடம்பையும் கெடுக்கும். கோபப்படுகிறவர்களின் ஆயுள்காலம் குறைகிறது–ங்கறது விஞ்ஞான உண்மை.

சிரிக்கிறவங்க ஆயுள்காலம் அதிகரிக்குது–ங்கறதும் விஞ்ஞான உண்மை.

கோபப்படறவங்களை யாருமே விரும்பறதில்லை. கோபப்படற அப்பா அம்மா கிட்டே பிள்ளைங்க நெருங்காது. கோபப்படற அதிகாரிகிட்டே ஊழியர்கள் நெருங்கமாட்டாங்க. கோபப்படற வாத்தியார்கிட்டே பிள்ளைங்க நெருங்கறதில்லை.



"அவன் எப்பப் பார்த்தாலும் வள்... வள்...ளுன்னு விழுவான்... அதனாலே எப்பவும் அவன் பக்கத்துலேயே இருக்கணும்ன்னு ஆசைப்படறேன்!"னு ஒருத்தன் சொன்னா அவனை இவன் வேடிக்கைப் பார்க்க ஆசைப்படறான்னு அர்த்தம்!

சரி... இந்தக் கோபம் எதனாலே வருது...? இயலாமையினாலேதான் வருது.

நீங்க நினைக்கிறதை நிறைவேற்றக் கூடிய சாமர்த்தியம் உங்க கிட்டே இல்லேங்கற போது அது கோபமா வெளிப்படுது... அவ்வளவுதான்!

திறமையுள்ளவன் கோபப்பட வேண்டிய அவசியமே வராது! ஒரு உண்மையான கவிஞன் கிட்டேபோய் ஒரு கவிதை எழுதிக்காட்டுங்கன்னு சொன்னா அவன் உடனே எரிச்சலடையக்கூடாது... எரிச்சல் வந்தா அது அவனது இயலாமையைக் காட்டுது!

சிற்பி சிலை செதுக்கறதுக்குக் கோபப் படக்கூடாது! ஓர் அதிகாரி சொன்னார்...

"நீங்க சொல்றதுலாம் சரிதான் சார்... இருந்தாலும் கோபப்படலேன்னா வேலை நடக்காது சார்... அதனாலேதான் தினமும் ஆபீஸ்லே கத்திக்கிட்டுக்கிடக்கறேன்!"–னார். ஆனா உண்மை என்ன தெரியுமா?

கத்தறதுனாலே... கத்தறது தான் நடக்குமே தவிர காரியம் நடக்காது...! வேலை நடக்கறது மாதிரி ஒரு பாவனை நடக்கும்... அவ்வளவுதான்.

தவறு செய்கிறவர்களுக்குத் தண்டனை கத்தறது மட்டுமில்லே...

திட்டுவாங்கற யாரும் தான் செஞ்சது தவறு தான் என ஒத்துக்கறது இல்லே! அதை அவங்க உணர்றதுமில்லே! அப்படி இருக்கறப்போ... திட்டறதுனாலே என்ன பிரயோஜனம்? திட்டறதின் நோக்கம் என்ன? திட்டு வாங்கறவங்க திருந்தணும்–ங்கறது தானே!

நேரம் கழித்து ரத்த அழுத்தத்தை சோதனை பண்ணி பார்த்தா... அது குறைஞ்சிருக்கும்-ன்னு சொல்றாங்க.

ஒரு நபர் ஓராண்டுக்குச் சராசரியாக 2000 பக்கங்களைப் படிச்சிருக்கணுமாம்! இது 'யுனெஸ்கோ' பரிந்துரை.

ஆனா நம்ம நாட்டுலே நாம சராசரியா படிக்கிறது 32 பக்கங்கள். அவ்வளவுதான். இவ்வளவுக்கும் நம்ம நாட்டுலே 6000க்கும் மேற்பட்ட நாளேடுகள்... 2000க்கும் மேற்பட்ட இதழ்கள்... மலர்கள் இவ்வளவு இருந்தும் சரியாவரலே!

இந்த உலகத்திலே... முதல் நூலகம் எங்கே எப்போ ஆரம்பமாச்சு தெரியுமா?

கி.மு. 2500-ஆம் ஆண்டுலே தான் அது ஆரம்பமாயிற்று. பாபிலோனியாவிலே 'அமில்அனு'-ங்கற அரசன்தான் நூலகத்தை உருவாக்கினான்.

அப்பல்லாம் தாள் கிடையாது. களிமண்தான். களிமண் பலகைகளிலே எழுதி, அதைத் தொகுத்து நூலாக்கி அந்த நூலகத்திலே வைத்திருந்தாங்களாம்!

அரசரின் நூலுகத்திலே ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இருந்ததாக வரலாற்றுக் குறிப்பு தெரிவிக்குது. அதுமட்டுமில்லே... அந்த நூலகத்திலே பொருள் வாரியாக **Subject** புத்தகங்களை வகைப்படுத்தி வைத்திருந்தாங்களாம்!

அதிலே மிச்சமிருந்த ஒரு 25 களிமண் பலகைப் புத்தகங்களைப் இன்றைக்கும் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்துலே இருக்குதாம்!

அச்சு, தாள் - இதெல்லாம் ஏற்பட்ட பிறகு அமைக்கப்பட்டது தான் பிரான்ஸ்லே உள்ள பாரீஸ் நூலகம். 1480-லே பிரெஞ்சு மன்னர் 11-ஆம் லூயி இந்த நூலகத்தை அமைச்சாராம்!

ஆனா அப்பல்லாம் அரசர்கள் மட்டும்தான் நூலகத்தைப் பயன்படுத்த முடியுமாம்! அதுக்கப்புறம் 17-ஆம் நூற்றாண்டுலே இந்த முறை மாறி பொதுமக்களும் அங்கே போகலாம் - படிக்கலாம்ங்கற நிலைமை வந்தது!

போட்லியன் நூலகம்-ன்னு அதுக்குப் பேரு. பாரீஸ் நகரத்திலே இருக்கு.



அங்கேதான் நூல்களின் பட்டியல் தயாரிப்புப் பணி **(Catalogue)** ஆரம்பமாயிற்று.

கல்வி வளர்ச்சியையும் நூலகத்தையும் இணைச்சவர் நெப்போலியன் போபார்ட்! முன்பணம் செலுத்தி புத்தகத்தைப் படிக்கிற முறையையும் அவர்தான் கொண்டு வந்தார்.

மக்கள் கிட்டே வசூலிக்கிற வரியின் ஒருபகுதியை நூலகத்திற்கு பயன்படுத்தியவரும் அவர்தானாம்! நெப்போலியன் நூலகத்திலே உலகத்திலே உள்ள எல்லா மொழி நூல்களும் உண்டாம்!

அங்கே ஒரு தமிழ் நூலும் இருந்திருக்கு... அது... கம்பராமாயணம்!

சோவியத் யூனியனுக்குப் படையெடுத்துப் போனப்போ அங்கேயிருந்து லட்சக்கணக்கான புத்தகங்களை 'ஸ்டெல்ஜ்'-ங்கற பனிச்சறுக்கு வாகனங்களிலே கொண்டு வந்ததாக வரலாறு.

அடுத்தபடியா குறிப்பிடத்தக்க நூலகம் பிரிட்டிஷ் நூலகம். மிகப்பழைய கையேட்டுப் பிரதியெல்லாம் அங்கே உண்டாம்!

1753-லே ஆரம்பமாச்சு. அதுலே உள்ள நூல்களை வரிசையா அடுக்கினா 180கி.மீ. நீளத்துக்கு வருமாம்!

மிகப்பெரிய நூலகம் அமெரிக்க தலைநகர் வாஷிங்கடன்-லே இருக்காம்!

இந்தியாவைப் பொருத்தவரைக்கும் பெரிய-பழைய நூலகம் கல்கத்தா நூலகம்.

எல்லா இந்திய மொழி நூல்களும் இங்கே உண்டு. மகாகவி பாரதியார் நடத்திய 'இந்தியா'-ங்கற இதழின் எல்லாப் பிரதிகளும் அங்கே பாதுகாப்பாக இருக்கு!

படிக்கும் பழக்கம் இங்கே வளர வேண்டியிருக்கு. ஒருத்தர்கிட்டே ஒரு புத்தகத்தைக் கொடுத்து விமர்சனம் எழுதச் சொல்லியிருந்தாங்க...

கொஞ்ச நாள் கழித்து அவரைப் போய்பார்த்து... "என்னங்க... புத்தகத்தைப் படித்துப் பார்த்தீங்களா?"-ன்னு கேட்டாங்க.

இதுக்கு அவரு, "இன்னும் இல்லீங்க... இப்பத்தானே விமர்சனமே எழுதி முடிச்சிருக்கேன்!" அப்படின்னாராம்!

23. பூனைக் குடும்பத்தில் மிக அழகான இனம் எது?

24. நமது ராணுவப் படைகளின் சுப்ரீம் கமாண்டர் யார்?

25. நிலவில் மனிதன் கால் வைத்த ஆண்டு எது?

26. சைக்கோபைல் என அழைக்கப்படுவது எது?

27. தொற்று நோய் வராமல் தடுக்கும் தாது உப்பு எது?

28. உலகின் பெரிய நூலகம் எது?

29. மருத்துவத்தில் மிகவும் பயன்தரும் ஓர் இந்திய மரம் எது?

30. அதிகமாக பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொல் எது?

31. உலகிலேயே பூமி அதிர்ச்சி அதிகம் ஏற்படும் நாடு எது?

32. காதல் கிரகம் என்று எந்த கோள் கருதப்படுகிறது?

33. 1999ம் ஆண்டு எதற்காக கொண்டாடப்பட்டது?

34. மாலத்தீவுகள் எந்தப் பெருங்கடலில் உள்ளது?

35. ஜனவரி 15 அன்று கொண்டாடப்படுவது எது?

36. மாமல்லபுரத்தின் வேறு பெயர் என்ன?

37. உடலின் எடையில் இரத்தம் எத்தனை பங்கு?

38. தாஜ்மஹால் எந்த ஆற்றின் கரையில் அமைந்துள்ளது?

39. இந்தியாவில் குங்குமப்பூ அதிகம் கிடைக்குமிடம் எது?

40. சைக்கிள் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?

41. வெற்றிடத்தின் வழியே செல்லாதது எது?

42. இரு கண்களால் இரு வேறு காட்சிகளை பார்க்கும் விலங்கினம் எது?

43. சூரியக்குடும்பத்தை கண்டறிந்தவர் யார்?

44. நீர்மூழ்கிக் கப்பலை கண்டுபிடித்தவர் யார்?

45. தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் யார்?

46. பாம்பின் விஷம் எந்தநோயைக் குணப்படுத்துகிறது?

47. போலியோ தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?



48. உலகின் ஒரே இந்து நாடு?

49. தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

50. விண்வெளியில் நுழைந்த முதல் பெண்மணி யார்?

**<u>விடைகள் :</u>**

| | |
|---|---|
| 1. லண்டன் | 2. எல்னோ |
| 3. தமிழ்நாட்டில் உள்ள வைனிபாப்பு | 4. 'ஷன் கான் சென்' |
| 5. நெல்சன் மண்டேலா | 6. பகோடா |
| 7. ஏற்காட்டில் | 8. 1952 |
| 9. களக்காடு | 10. வெள்ளி கிழமை |
| 11. 1911 | 12. பிரான்ஸ் |
| 13. கண்விழி | 14. பெங்கால் கெஸ்ட் |
| 15. பன்னீர்ப் பூ | 16. ஷாஜஹானாபாத் |
| 17. வெள்ளி | 18. 294 |
| 19. ஆஸ்திரேலியா | 20. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் |
| 21. 4 கிலோ கிராம் | 22. 68 வயதில் |
| 23. பனிச் சிறுத்தை | 24. குடியரசுத் தலைவர் 25. |
| 1969 | 26. குளிரில் வளரும் தாவரம் |
| 27. துத்தநாகம் | 28. மாஸ்கோ லெனின் நூலகம் |
| 29. வேம்பு | 30. தி |
| 31. ஜப்பான் | 32. வீனஸ் |
| 33. முதியோர் ஆண்டு | 34. இந்தியப் பெருங்கடல் |
| 35. இராணுவ தினம் | 36. 7 கோபுர பட்டினம் |
| 37. 12-ல் 1 பங்கு | 38. யமுனா |
| 39. காஷ்மீர் | 40. இங்கிலாந்து |
| 41. ஒலி | 42. குதிரை |
| 43. கோபர் நிக்ஸ் | 44. டேவிட் புஷ்னல் |
| 45. பிரான் | 46. புற்றுநோய் |
| 47. ஆல்பர்ட் சேலின் | 48. நேபாளம் |
| 49. ஹோவே | 50. தெரஸ்கோவா |

பெயர் : ரகுணா Case No : 291

கிராமம் : பட்டிணச்சேரி Child No : 037371



ஔவை குழந்தை வளர்ச்சி திட்டத்தின் மூலம் எங்கள் குழந்தை ரகுணா தத்தெடுக்கப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக உதவிகள் செய்து வருகிறார்கள். நான் செம்பருத்தி மகளிர் குழு மூலம் சிறுதொழில் புரிய இத்திட்டத்தின் வாயிலாக லோன் பெற்று மளிகை கடைவைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எங்களது குடும்ப செலவுகளை கவனித்து கொள்கிறோம். இத்தருணத்தில் எங்களது ஸ்பான்சருக்கு எங்களது குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



## திட்ட செயல்பாடுகள்

### 1. ஸ்பான்சர் தினம்

நாகப்பட்டினம் மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட 1004 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டு 786 குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள். 12/12/10 அன்று ஸ்பான்சருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் என மொத்தம் 137 நபர்கள் கலந்துக் கொண்டு தங்களது மகிழ்ச்சி மற்றும் நன்றியை ஸ்பான்சருக்கு தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் நகரமன்ற தலைவர் திரு. சந்திரமோகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியின் முடிவில் 2,73,468/- ரூபாய் கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஸ்பான்சர் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது.



## 4. உலக கைகழுவும் தினம் :

நாகப்பட்டினம் மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள கைகழுவும் தினம் கொண்டாடப்பட்டது. நாகப்பட்டினம், கீழ்வேளூர் பகுதியிலுள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் 450 குழந்தைகளும், காரைக்கால் காளிகுப்பம் அரசு தொடக்கப்பள்ளியில் 200 குழந்தைகளும் கலந்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சி குழந்தைகளுக்கு தன் சுத்தம் குறித்து கிராம செவிலியர் திருமதி. நீலாவதி மற்றும் சாந்தி பொற்செல்வி அவர்கள் எடுத்துரைத்தனர். இவர்களுள் நகர பஞ்சாயத்து தலைவி கோகிலா லெட்சுமணன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் நாகப்பன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






## 5. குழந்தை பாதுகாப்பு பயிற்சி முகாம் :

நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தொடக்கப்பள்ளி, நடுநிலைபள்ளி, மேல்நிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளி என மொத்தம் 24 பள்ளிகளுக்கு முதன்மை கல்வி அலுவலரின் அனுமதியுடன் குழந்தை உரிமை மற்றும் பாதுகாப்பு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் மொத்தம் 1200 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். சைல்டுலைன் 1098 நான்கு முக்கிய குழந்தை உரிமைகள் மற்றும் இணை நிறுவனங்களின் பணிகள் குறித்து பயிற்சி அமைந்தது.





**R.தீபசுந்தரி**

வளர்இளம் பெண்கள் குழு

அக்கரைப்பேட்டை





**R.பாக்யஸ்ரீ**

குழந்தைகள் குழு

அக்கரைப்பேட்டை



நாகை அவ்வை கிராம நலசங்கம் சார்பில் பாராளுமன்ற தேர்தலில் குழந்தைகள் உரிமை நிலை குறித்த கருத்தரங்கம் நடைபெற்ற போது எடுத்தபடம்.

### மகப்பேறு, குழந்தை இறப்புகளை தடுக்க

# ஆரம்பசுகாதார நிலையங்களின் வசதிகளை மேம்படுத்த வேண்டும்

## அவ்வை கிராம நலசங்கம் தீர்மானம்

நாகப்பட்டினம், ஏப்.25– மகப்பேறு, குழந்தை இறப்புகளை தடுக்க ஆரம்பசுகாதார நிலையங்களின் வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று நாகை அவ்வை கிராம நலசங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

### கருத்தரங்கம்

நாகை அவ்வை கிராம நலசங்கம் மற்றும் தமிழ்நாடு போர்லஸ் ஆகியவை இணைந்து, பாராளுமன்ற தேர்தலில் இளம் குழந்தைகளின் உரிமை நிலை குறித்த கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கிற்கு குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயமணி தலைமை தாங்கினார். அவ்வை கிராம நலசங்க செயலாளர் கிருஷ்ணகுமார் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு போர்லஸ் லெனின் தேவா, கிராம செவிலியர் மகாராணி, சமூக சேவகி மாலதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர். மேலும் இளம் குழந்தைகளின் உரிமைகள் குறித்து விளக்கி கூறினர். கூட்டத்தில் கீழ்க்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன:–

### மகப்பேறு நிதியுதவி

ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் தரமான கட்டிடத்துடன் குடிநீர்வசதி, சுகாதாரம் மற்றும் விளையாட்டுதளம் ஆகியவற்றை அமைக்க வேண்டும். மேலும் தகுதியான பயிற்சி பெற்ற 3 பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். பொது விநியோகம் மூலம் அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படும் அரிசி, பருப்பு மற்றும் இதர தானிய வகைகளின் தரத்தினை உறுதி செய்ய வேண்டும். தானியங்களின் மொத்த உற்பத்தியில் 1 விழுக்காடு நிதியை 6 வயதுகுட்பட்ட குழந்தைகளின் நலனுக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும். பதிவு செய்யபடாத ஸ்கேன் மையங்களை தடைசெய்ய வேண்டும். மகப்பேறு காலங்களில் கிடைக்கபெறும் அரசு உதவி திட்டங்களை உரிய கால நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட நபருக்கு கிடைக்க வேண்டும்.

### ஆரம்ப சுகாதார நிலையம்

குழந்தை இறப்பு, மகப்பேறு இறப்பை தடுக்க ஆரம்ப சுகாதார நிலையங்களின் வசதிகளை மேம்படுத்த வேண்டும். இளம் குழந்தைகளுக்கென்று விற்பனையாகும் பால்பவுடர், அயோடின் உப்பு போன்றவைகளின் தரத்தை சுகாதார ஆய்வாளர்கள் உறுதி செய்ய வேண்டும். எய்ட்ஸ் தொற்றுள்ள நபர்களுக்கு ஊசி போடுதல் மற்றும் அறுவை சிகிச்சை மறுக்கப்படாமல் உரிய மருத்துவ சேவை வழங்க வேண்டும். மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக அவ்வை கிராம நலச்சங்க திட்ட மேலாளர் மணிவண்ணன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் வனிகா



# வாழ்வுதிறன் குறித்த பயிற்சி முகாம்

நாகப்பட்டினம்,நவ23– நாகை அவ்வை கிராம நலச் சங்கம்; குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் மற்றும் சைல்டு லைன்–1098 ஆகியவை சார்பில் நாகை நடராஜன் தமயந்தி மேல்நிலைப்பள்ளியில் வாழ்வுதிறன பயிற்சி முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் முருகன் தலைமை தாங்கினார். ஆசிரியர் மாரிமுத்து வரவேற்றார். நிகழ்ச்சியில் அவ்வை கிராம நலச்சங்க திட்ட மேலாளர் (குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்) மணிவண்ணன் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு வாழ்க்கை திறன் மேம்பாட்டு குறித்து பயிற்சி அளித்தார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக நாகை அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அமுதாராணி கலந்து கொண்டு பேசினார். நிகழ்ச்சியில் நாகை சைல்டுலைன்–1098 திட்ட ஒருங்கிணைப்பாளர் மணி, நடராஜன் தமயந்தி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை புவனேஸ்வரி, பள்ளி செஞ்சுருள் சங்க தலைவர் குமார் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் மொத்தம் 182 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி ஆசிரியர் சீனிவாசன் நன்றி கூறினார்.

### நாகையில்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## 26–ந் தேதி நடக்கிறது

நாகப்பட்டினம்,நவ.23– நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 26–ந் தேதி (வெள்ளிக்கிழமை) மாவட்ட கலெக்டர் அலுவலக முதன்மை கூட்டரங்கில் கலெக்டர் முனியநாதன் தலைமையில் காலை 11 மணிக்கு நடக்கிறது. கூட்டத்தில் நாகை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரிவித்து பயன் பெற்றுக்கொள்ளலாம். இந்த தகவலை நாகை மாவட்ட கலெக்டர் முனியநாதன் தெரிவித்துள்ளார்.

தினத்தந்தி 23-11-10

## வாழ்வுதிறன் குறித்த பயிற்சி முகாம்

நாகப்பட்டினம்,நவ23– நாகை அவ்வை கிராம நலச் சங்கம், குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் மற்றும் சைல்டு லைன்–1098 ஆகியவை சார்பில் நாகை நடராஜன் தமயந்தி மேல்நிலைப்பள்ளியில் வாழ்வுதிறன் பயிற்சி முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் முருகன் தலைமை தாங்கினார். ஆசிரியர் மாரிமுத்து வரவேற்றார். நிகழ்ச்சியில் அவ்வை கிராம நலச்சங்க திட்ட மேலாளர் (குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்) மணிவண்ணன் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு வாழ்க்கை திறன் மேம்பாட்டு குறித்து பயிற்சி அளித்தார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக நாகை அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அமுதாராணி கலந்து கொண்டு பேசினார். நிகழ்ச்சியில் நாகைசைல்டுலைன்–1098 திட்ட ஒருங்கிணைப்பாளர் மணி, நடராஜன் தமயந்தி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை புவனேஸ்வரி, பள்ளி செஞ்சுருள் சங்க தலைவர் குமார் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் மொத்தம் 182 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி ஆசிரியர் சீனிவாசன் நன்றி கூறினார்.

### நாகையில்

## விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

### 26–ந் தேதி நடக்கிறது

நாகப்பட்டினம்,நவ.23– நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 26–ந் தேதி (வெள்ளிக்கிழமை) மாவட்ட கலெக்டர் அலுவலக முதன்மை கூட்டரங்கில் கலெக்டர் முனியநாதன் தலைமையில் காலை 11 மணிக்கு நடக்கிறது. கூட்டத்தில் நாகை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரிவித்து பயன் பெற்றுக்கொள்ளலாம். இந்த தகவலை நாகை மாவட்ட கலெக்டர் முனியநாதன் தெரிவித்துள்ளார்.



## "நமது கடமை"

ஆதரவற்ற குழந்தைகளைக் கண்டால் இலவச தொலைபேசி எண் – 1098க்கு தொடர்பு கொண்டு தெரிவியுங்கள், எங்களால் நிச்சயமாக உதவ முடியும்.

### யார் அந்த குழந்தைகள் ?

### 18 வயது வரை உள்ள அனைவரும் குழந்தைகள் ஆவர்

- ❑ சாலையோரம் வாடும் குழந்தைகள்
- ❑ உழைக்கும் குழந்தைகள்
- ❑ வீட்டை விட்டு ஓடிவந்த குழந்தைகள்
- ❑ தங்க இடமின்றி தவிக்கும் குழந்தைகள்
- ❑ ஆதரவற்று தவிக்கும் குழந்தைகள்
- ❑ ஆபத்திலிருக்கும் குழந்தைகள்
- ❑ கொடுமைக்குள்ளாகும் குழந்தைகள்
- ❑ தனித்து விடப்பட்ட குழந்தைகள்

**சைல்டுலைன் – 1098 ன் கடமைகள் :–**

சைல்டுலைன் – 1098 என்பது 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலனுக்காகவே 24 மணி நேரமும் செயல்படும் இலவச தொலைபேசி எண் ஆகும். இதன் கடமைகள்...

✶ தொலைபேசி அழைப்பு வந்த உடனேயே சைல்டுலைன் பணியாளர்கள் விரைந்து வந்து ஆதரவற்ற குழந்தைகளை மீட்டு, ஆதரவளிப்பர்.

✶ குழந்தைகளின் நலன் கருதி அரசு அமைப்புகளுடன் இணைந்து மறுவாழ்வு அளித்தல்.

✶ ஆதரவற்ற குழந்தைகளை அரசு அமைப்புகளுடன் இணைந்து அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைப்பதை உறுதி செய்தல்...

**நமது கடமை :–**

✶ ஆதரவற்ற குழந்தைகளைக் கண்டால் இலவச தொலைபேசி எண் – 1098–க்கு தொடர்பு கொண்டு தெரிவியுங்கள்!


✶ சைல்டுலைன் – 1098 என்ற இலவச தொலைபேசி எண்ணை உங்களோடு தொடர்புடைய அனைவரது மனதிலும் பதிய வையுங்கள்!

**ஆதரவற்ற குழந்தையைக் காத்திடு அப்பெருமை உனதே மகிழ்ந்திடு**


குழந்தைத் தொழிலாளர்


சாலையோர குழந்தை


குழந்தைகள் கொடுமை


தனித்து விடப்பட்ட குழந்தை